## மாவட்டச் செயலகம், மொனராகல

## மொனராகல மாவட்டச்செயலகம் மற்றும் அதன் கீழுள்ள பிரதேச செயலாளர் அலுவலகங்களது கணக்குகள் தொடர்பான பொழிப்பறிக்கை

### 1. மாவட்டச் செயலகத்தின் பிரதான பணிகள்

(i) பிரதேச நிர்வாகத்தைச் சுழற்சியுடனும் சக்திமிக்கதாகவும் பேணுவதற்காக தேசிய மட்டத்திலான நிறுவனங்களுடன் ஒருங்கிணைதலும் பணிகளை இலகுவாக்குதலும்

(ii) வெளிப்படையான வினைத்திறன் மற்றும் பயனுள்ள அரச சேவையினூடாக மாவட்ட மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தல்

(iii) மாவட்ட அரச ஊழியர்கள் பொதுமக்களது தேவைகள் தொடர்பாக பணிவுடன் செயலாற்றுவதற்கு வெற்றிபூர்வமான எண்ணங்களை வழங்குதல்

(iv) முறையாகவும் வினைத்திறனுடனும் நிர்வாக நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதற்கு உசிதமான விதத்தில் மாவட்டத்தின் மனிதவள, உருப்படி வளங்களைச் செயற்படுத்தலும் முகாமைத்துவமிடலும்

(v) மாவட்டத்தின் அரச வருவாயில் செலவு வைக்கப்பட வேண்டிய சகல வருவாய்களையும் குறித்த நேரத்தில் முறையாக சேகரித்தல்

(vi) அரச சார்பற்ற நிறுவனங்களது நடவடிக்கைகளின்போது வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களை ஒருங்கிணைத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் என்பவற்றின் வாயிலாக மாவட்டத்திற்கு பெருமளவில் கிடைக்கும் வளங்களை மேலும் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கு உத்தரவாதமளித்தல்.

## 2. மாவட்டச் செயலகத்தின் கீழுள்ள பிரதேச செயலாளர் அலுவலகங்கள்

மொனராகல
புத்தள
வெள்ளவாய
தனமல்வில
பிபில
மெதகம
படல்கும்புற
மடுல்ல
சியம்பலாண்டுவ
கதிர்காமம்
செவனகல

## 3. வருடாந்த செயல்திட்டம்

மாவட்டச் செயலகம் நிதி ஆண்டின் ஆரம்பத்தில் வருடாந்த செயல் திட்டத்தைத் தயாரிக்கவில்லை.

## 4. கணக்குகள்

### 4.1 மொத்த நிதியேற்பாடும் செலவினமும்

மொனராகல மாவட்டச் செயலகம் மற்றும் அதன் கீழுள்ள 11 பிரதேச செயலாளர் அலுவலகங்கள் என்பவற்றிற்கு ஏற்பாடு செய்த மொத்த நிகர நிதி ரூபா 342,550,000 ஆகும். மீளாய்வாண்டு முடிவில் அதில் ரூபா 338,298,613 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய, மாவட்டச் செயலகத்தினதும் பிரதேச செயலாளர் அலுவலகத்தினதும் நிகர சேமிப்பு ரூபா 4,251,387 ஆகும். அது மொத்த நிகர நிதியேற்பாட்டில் நூற்றுக்கு 1.24 சதவீதமாகும்.

| செலவினம் | மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு | தேறிய நிதியேற்பாடு | உள்ளபடியான செலவினம் | சேமிப்பு | சேமிப்பு நிகர நிதியோற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | | | | % |
| மீண்டுவருவன | 241,400,000 | 241,400,000 | 237,507,345 | 3,892,655 | 1.61 |
| மூலதனம் | 101,150,000 | 101,150,000 | 100,791,268 | 358,732 | 0.35 |
| | 342,550,000 | 342,550,000 | 338,298,613 | 4,251,387 | 1.24 |

## 4.2 பிற அமைச்சினாலும் திணைக்களங்களாலும் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியைப் பயன்படுத்துதல்

பல்வேறு வேலைகளுக்கு பிற அமைச்சுகள்/ திணைக்களங்கள் கீழ் குறிப்பிட்டவாறு மொத்தமாக வழங்கியிருந்த தொகை ரூபா 1,172,587,245 ஆகும். அது பயன்படுத்தப்பட்ட விபரம் வருமாறு.

| அமைச்சு /திணைக்களம் | ஏற்பாடு செய்த நிதி | உள்ளபடியான செலவினம் | 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| புத்தசாசன மற்றும் சமயவிவகார அமைச்சு | 2,593,231 | 2,153,241 | 439,990 |
| பாதுகாப்பு அமைச்சு | 219,455 | 200,752 | 18,703 |
| பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 619,752,368 | 440,015,629 | 179,736,739 |
| இடர் முகாமைத்துவ அமைச்சு | 5,130,619 | 4,789,927 | 340,692 |
| நீதி அமைச்சு | 1,364.055 | 1,164,936 | 199,119 |
| போக்குவரத்து அமைச்சு | 255,600 | 255,600 | 0 |

| | | | |
|---|---|---|---|
| கமத்தொழில் அமைச்சு | 295,435 | 254,630 | 40,805 |
| சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சு | 22,418,635 | 19,943,896 | 2,474,739 |
| பொது நிர்வாக, உள்நாட்ட லுவல்கள் அமைச்சு | 8,350,147 | 8,251,087 | 99,060 |
| சமூக சேவைகள் அமைச்சு | 4,787,985 | 4,544,152 | 243,833 |
| தொழிலாளர் உறவு மற்றும் உற்பத்தி மேம்பாட்டு அமைச்சு | 707,108 | 692,927 | 14,181 |
| பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு | 4,703,000 | 4,655,946 | 47,054 |
| தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | 4,670,381 | 4,140,833 | 529,498 |
| தேசிய மொழிகள் மற்றும் சமுதாய நல்லிணக்க அமைச்சு | 315,335 | 304,629 | 10,706 |
| தேசிய வைத்திய அமைச்சு | 2,500,000 | 2,500,000 | 0 |
| தேசிய மரபுகள் மற்றும் கலாசார விவகார அமைச்சு | 3,000,000 | 3,0000,000 | 0 |
| மீள்குடியேற்ற அமைச்சு | 1,552,640 | 1,552,197 | 443 |
| நீர்பாசன மற்றும் நீர்வழங்கல் முகாமைத்துவ அமைச்சு | 833,796 | 705,867 | 127,929 |

| | | | |
|---|---|---|---|
| காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு | 3,390,323 | 3,222,998 | 167,325 |
| இளைஞர் விவகார அமைச்சு | 241,986 | 178,623 | 63,363 |
| சுற்றாடல் அமைச்சு | 600,000 | 474,354 | 125,646 |
| பொது முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு | 3,164,240 | 3,143,095 | 21,145 |
| புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு | 490,000 | 425,000 | 65,000 |
| பௌத்தமத விவகாரத்திணைக்களம் | 10,454,581 | 10,039,436 | 415,145 |
| கலாசார விவகாரத்திணைக்களம் | 13,340 | 8,805 | 4,535 |
| தகவல் திணைக்களம் | 8,000 | 2,698 | 5,302 |
| நன்னடத்தை சமூகசேவைகள் திணைக்களம் | 4,202,558 | 3,832,562 | 369,996 |
| சிறுவர் பராமரிப்புத் திணைக்களம் | 3,419,773 | 3,269,844 | 149,929 |
| சமூர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களம் | 352,890,721 | 337,024,934 | 15,865,787 |
| விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம் | 2,699,127 | 0 | 2,699,127 |
| குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் | 2,550 | 2,145 | 405 |

| | | | |
|---|---|---|---|
| ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் | 12,444 | 10,962 | 1,482 |
| குடிசன புள்ளிவிபரத் திணைக்களம் | 1,420,799 | 1,143,221 | 277,578 |
| ஓய்வூதியத் திணைக்களம் | 99,846,091 | 89,354,294 | 10,491,797 |
| பதிவாளர் நாயகத் திணைக்களம் | 218,630 | 217,083 | 1,547 |
| காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம் | 4,832,036 | 4,576,448 | 255,588 |
| உணவு ஆணையாளர் நாயகத்திணைக்களம் | 412,045 | 412,045 | 0 |
| மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் | 818,211 | 572,232 | 245,979 |
| மொத்தம் | 1,172,587,245 | 957,037,078 | 215,550,167 |

## 4.3 கணக்காய்வு மற்றும் கணக்காய்வு நோக்கெல்லை

மொனராகல மாவட்டச் செயலகத்தின் 2010 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள், கணக்கிணக்கக் கூற்றுக்கள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2011 ஜூன் 24 ஆந் திகதியன்று மாவட்டச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயம், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் கணக்கிணக்கக் கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும்

கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறானவை.

## 4.4 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்

ஒதுக்கீட்டுக் கணக்கானது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பினது 148, 149, 150, 152 ஆகிய உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு ஏற்ப பேணப்படுதல், தயாரிக்கப்படுதல் மற்றும் நியாயபூர்வமாக சமர்ப்பிக்கப்படுதல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுக்களைக் கொண்டிராத கணக்குகளையும் கணக்கிணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல், நியாயபூர்வமாகச் சமர்ப்பிக்கப்படுதலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடலும், அமுல்ப்படுத்தலும் பேணிவருதலும் இப்பொறுப்பில் உள்ளடங்கும்.

## 4.5 கணக்குகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புரைகள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிசார் கூற்றுக்கள் மற்றும் புத்தகங்கள் என்பவற்றின் பிரகாரம், மொனராகல மாவட்டச் செயலக ஒதுக்கீட்டுக் கணக்கும் கணக்கிணக்கக் கூற்றும் இவ்வறிக்கையில் (அ) தொடக்கம் (இ) வரையிலான பொது அவதானிப்புரைகள் மற்றும் 4.5 தொடக்கம் 4.16 வரையிலான பந்திகள் என்பவற்றில் உள்ளடக்கிய கணக்காய்வு அவதானிப்புரைகளுக்கமைய திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதென அவதானிக்கப்படுகின்றது.

**(அ) வரவு செலவுதிட்ட வேறுபாடுகள்**

(i) நான்கு செலவின விடயங்களுக்குக் கூடுதலான நிதியேற்பாடு செய்யப்பட்டமையால், ஏற்பாடு செய்த நிதி பயன்படுத்தப்பட்டதன் பின்னர் எஞ்சிய தொகை நிகர நிதியேற்பாட்டில் 28 க்கும் 55 க்கும் இடைப்பட்ட சதவீதத்தில் அமைந்திருந்தது.

(ii) நிதிப் பிரமாணங்கள் 66, 69 என்பவற்றின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட நிதியை 2 செலவின விடயங்களுக்கு மாற்றஞ் செய்கையில் தேவைக்கதிகமாக மாற்றம் மேற்கொள்ளப்பட்டு அதன் நிமித்தம் ரூபா 82,438 எஞ்சியிருந்தது.

**(ஆ) பொது வைப்புக் கணக்கு**

(i) வெள்ளவாய, தனமல்வில, சியம்பலாண்டுவ, படல்கும்புற எனும் பிரதேச செயலாளர் அலுவலகங்களில் 2 ஆண்டுகளுக்கு மேலாக நிலவிய ரூபா 4,338,238 வைப்பு மீதி தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 க்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ii) நிதிப் பிரமாணம் 215(3) க்கு முரணாகவும் திறைசேரியின் அங்கீகாரம் இன்றியும் மாவட்டச் செயலகம் மற்றும் மொனராகல பிரதேச செயலாளர் அலுவலகம் என்பன ஏற்பாடு செய்யப்பட்ட நிதியம் பொது வைப்புக் கணக்கிற்கு ரூபா 8,384,340 ஐ மாற்றச் செய்திருந்தன.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணம் தொடர்பான கணக்கிணக்கக் கூற்று**

விடய இலக்கம் 27701 - அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணம் தொடர்பான 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கணக்கிணக்கக் கூற்றின் பிரகாரம், அத்தினத்தில் உள்ளவாறு அறவீடு நிலுவையாக இருந்த மீதிகளது கூட்டுத்தொகை ரூபா 5,332,923 ஆகும். அந்நிலுவை மீதி அறவிடப்படுவது தொடர்பான தொடர் நடவடிக்கைகள் நலிவடைந்த நிலையில் இருந்தன.

## 4.6 சொத்து முகாமைத்துவம்

### (அ) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

2010 ஒக்டோபர் 7 ஆந் திகதியன்று ரூபா 467,500 செலவழித்து “பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்கு வழங்குவதற்காக 11 கணனி மென் அணிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அவற்றைக் கொள்வனவு செய்வதற்கு முன் அம்முறைமையைப் பயன்படுத்தும் விதம் தொடர்பாக எதுவித பயிற்சியும் வழங்கப்படவில்லை. முறைமைக்குரிய கைநூலும் வழங்கப்படவில்லை. 2011 மார்ச் 09 ஆந் திகதியன்றும் இம்முறைமை செயற்படக்கூடியவாறு இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

### (ஆ) தீர்த்து வைக்கப்படாத பொறுப்புக்கள்

(i) மாவடடச் செயலகம் மற்றும் பிரதேச செயலாளர் அலுவலகங்கள் என்பன 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்து வைக்காதிருந்த பொறுப்புகளின் பெறுமதி ரூபா 313,765 ஆகும்.

(ii) வருடாந்த நிதியேற்பாட்டு வரம்பிலும் கூடிய ரூபா 146,972 பொறுப்புக்கள் 3 செலவின விடயங்களில் ஏற்பட்டிருந்தன.

(iii) மீளாய்வாண்டினது ரூபா 49,691 பொறுப்புகள் கணக்கிலிடப்படவில்லை.

## 4.7 இணங்காமை

(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்களின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டுக் கீழே காட்டப்படுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | நிதிப் பிரமாணம் | | |
| | 104(3) மற்றும் 104(4) | கணிப்பிடப்படவில்லை | 2002 ஆம் ஆண்டில் விபத்திற்குள்ளான வெள்ளவாய பிரதேச செயலாளர் அலுவலக கெப் வண்டி சம்பந்தமாக ஆரம்ப மற்றும் இறுதி அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவில்லை |
| | 104(4) | கணிப்பிடப்படவில்லை | 2004 ஏப்ரல் 4 ஆந் திகதியன்று விபத்திற்குள்ளான தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சிற்குச் சொந்தமான ஜீப் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(4) க்கேற்ப இறுதி அறிக்கையானது 2011 மார்ச் 9 அன்றும் சமர்ப்பிக்கப்படாமை. |
| | 237(ஆ) | 60,000 | சியம்பலாண்டுவ பிரதேச செயலாளர் அலுவலகம் பொருட்களைப் பெறுவதற்கு முன்பே வழங்குநருக்குப் பணத்தைச் செலுலுத்தியமை. |

(ii) சுற்றறிக்கை ஏற்பாடுகள்

| | | |
|---|---|---|
| பொது நிர்வாகச் சுற்றறிக்கை | | |
| 2009 மார்ச் 24 ஆந் திகதி 13/2008(ii) ஆம் இலக்கச் சுற்றறிக்கை | 335,010 | கதிர்காமம் பிரதேச செயலாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட வாகனங்களுக்குக் குறித்த வரம்பிற்கும் மேலாக வழங்கப்பட்ட 4,565 லீட்டர் எரிபொருள் தொடர்பாக அமைச்சின் செயலாளரது அங்கீகாரம் பெறப்படவில்லை. |

(iii) அமைச்சின் சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| சுற்றாடல் மற்றும் இயற்கைவள அமைச்சின் செயலாளரது 2007 ஜூலை 31 ஆந் திகதிய 01-2007 ஆம் இலக்க சுற்றறிக்கை | | படல்கும்புற பிரதேச செயலாளர் 60 சந்தர்ப்பங்களில் இச் சுற்றறிக்கைக்கு முரணாக வீட்டுத் தளபாடப் போக்குவரத்திற்கு அனுமதிப்பத்திரத்தை வழங்கியிருந்தார். |

(ஆ) வரித் தேவைகளுக்கு இணங்காமை

2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டத்தின் 153 ஆம் பிரிவில் குறிப்பிடப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம், படல்கும்புற பிரதேச செயலாளர் அலவலகத்தாலும் மொனராகல பிரதேச செயலாளர் அலுவலகத்தாலும் ரூபா 101,849 ரூபா 29,615 என தடுத்து வைத்த வரியை அறவிடாமலேயே கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன.

## 4.8 செயற்திட்ட அமுலாக்கலில் உள்ள நலிவுகள்

### (அ) செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிடுதல்

மேதகம பிரதேச செயலாளர் அலுவலகம் 2007 பன்முகப்படுத்தப்பட்ட நிதியேற்பாட்டின் கீழ் கொஹுகும்புற ஜீவவாயுக்கூறு மற்றும் கார்பணிக் பசளை உற்பத்தி நிலையத்தை அமைப்பதற்கு ரூபா 499,998 செலவு செய்து 250 தகரத்தால் தகடுகள், 1200 மீட்டர் எல்கத்தின் குழாய் மற்றும் 1123 மீட்டர் கிலர் ஹோஸ் என்பவற்றைக் கொள்வனவு செய்திருந்தது. எனினும், 2010 நவெம்பர் 2 ஆந் திகதியன்றும் செயற்திட்டம் ஆரம்பமாகாததுடன் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் அலுவலக வளாகத்தில் இருந்தது.

### (ஆ) எதிர்பார்த்த நலன்களைப் பெறாத செயற்திட்டங்கள்

I தனமல்வில பிரதேச செயலாளர் அலுவலகம் இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் நிதியைப் பயன்படுத்தி இந்துறுகஸ்வெவ குளக்கரையில் செடிகளைப் பயிரிடும் தொழிலை அங்கீகரிக்கப்பட்ட சங்கம் ஒன்றிடம் ஒப்படைத்து 2010 டிசெம்பர் 31 அன்று தடுத்துவைத்த பணத்தைக் கழித்தவாறு சங்கத்திற்கு ரூபா 177,750 வழங்கியிருந்தது. குளக்கரையில் பற்றைகளை அகற்றாது செடிகளை நட்டமை, குறித்த எண்ணிக்கையிலான செடிகளை நடாமை, நடப்பட்ட செடிகளைப் பாதகாப்பதற்கான வேலி முறையாக அமைக்கப்படாமை போன்ற குறைபாடுகள் இருக்கையில் அவை முறைப்படி நிறைவேறியதாக அறிக்கை தயாரித்து அங்கீகரிக்கப்பட்ட அச்சங்கத்திற்கு மேற்படி தொகையைக் கொடுப்பனவு செய்திருந்ததுடன் இவ் வேலைக்குச் செலவிடப்பட்ட பணத்திற்கு ஈடான நலன் பெறப்படாமையும் அவதானிக்கப்பட்டன.

II மாவட்டச் செயலகம் கிராமியக் கைத்தொழில் மற்றும் சுயவேலைவாய்ப்பு மேம்பாட்டு அமைச்சின் நிதியைப் பயன்படுத்தி ரூபா 5,655,984 செலவில் நாகஹமட உணவுத் தயாரிப்பு உற்பத்திக் கிராமத்திற்கான பொது வசதிகள் நிலையத்தை நிர்மாணித்திருந்தது. 2011 மார்ச் 23 ஆந் திகதிய பரிசீலனையில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

* வேலைமுடிவுற்று ஒப்படைக்கப்பட்ட கட்டிடம் 2011 மார்ச் 3 ஆந் திகதியன்றும் பயன்படுத்தப்படாதிருந்தது.

* விற்பனைக் கூடக் கட்டிடத்தின் கூரையின் முகடு சரிவர அமைக்கப்படாமையால் கட்டிடத்துள் நீர் கசித்தவாறிருந்தது.

* விற்பனைக் கடக்கட்டிடத்தில் பொருத்தப்பட்ட மின் பாவணைக்கருவிகளின் சில பகுதிகள் களவாடப்பட்டிருந்தன.

## 4.9 வங்கிக் கணக்குச் செயற்பாட்டில் குறைபாடுகள்

### சீராக்கல் செய்யப்பட வேண்டிய மீதி

2010 டிசெம்பர் மாதத்தின் பொருட்டு மாவட்டச் செயலகமும் 7 பிரதேச செயலாளர் அலுவலகங்களும் தயரித்த வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களில் காணப்படும் சீராக்கலுக்கான பகுப்பாய்வின் பிரகாரம் புலனாகிய தகவல்கள் வருமாறு.

| சீராக்கங்கள் தொடர்பான விபரம் | காலப்பகுப்பாய்வு | | மொத்தம் |
|---|---|---|---|
| | 6 மாதங்களுக்கு மேற்பட்டதும் 1 ஆண்டிற்குக் குறைவானதும் | 1 ஆண்டிற்கு மேற்பட்டதும் 3 ஆண்டுகளுக்குக் குறைவானதும் | |
| | ரூபா | ரூபா | ரூபா |
| தேறாத வைப்புகள் | 1,170 | 67,495 | 1,370 |
| வழங்கப்பட்டு கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கபடாதுள்ள காசோலைகள் | 106,982 | 67,495 | 174,477 |
| | 108,152 | 67,695 | 175,847 |

4.10 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

மாவட்டச் செயலகமும் படல்கும்புற பிரதேச செயலாளர் அலுவலகமும் மேற்கொண்ட சில கொடுக்கல் வாங்கல்கள் சர்ச்சைக்குரியனவாகும். தெரிவுச் செவ்வைகளின் போது அவ்வாறு புலனாகிய சில கொடுக்கல் வாங்கல்களின் விபரம் வருமாறு.

(அ) மாவட்டச் செயலகம்

அநேக ஆண்டுகளுக்கு முன்னர் ஓய்வுபெற்ற 2 சாரதிகள் இரு அரசாங்க மனைகளில் அனுமதியன்றி வாழ்ந்திருந்தனர். அகற்றுவதற்கு இதுவரை போதியளவு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. அரசாங்க 2011 ஏப்ரல் 30 வரை போதியளவு சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை அரசாங்க மனைகளை ஒப்படைப்பதற்கு முன்னர் அவர்களது ஆவணங்கள் விடுவிக்கப்பட்டிருந்தன.

(ஆ) படல்கும்புற பிரதேச செயலாளர் அலுவலகம்

இலங்கை சமுர்த்தி அதிகாரசபையின் நிதியைப் பயன்படுத்தி 24,327 கீனிவாழைக் கன்றுகளைக் கொள்வனவு செய்வதற்கென 2010 செப்டம்பரில் வழங்குநர்களுக்கு ரூபா 485,820 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

I. கொள்வனவு செய்யப்பட்ட கன்றுகளின் எண்ணிக்கை 24,327 எனக் குறிப்பிடப்பட்ட போதும், விநியோகப் பதிவேட்டின்படி 22,870 கன்றுகளே வழங்கப்பட்டிருந்தன. இதற்கமைய, குறைவுற்ற கன்றுகளின் எண்ணிக்கை 1,457 ஆகும். எனினும், 24,327 கன்றுகளுக்கும் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

II. றனுகல மற்றும் அங்கட ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இரண்டிற்கும் 20,862 சீனி வாழைக்கன்றுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும், விநியோகப் பதிவேட்டின் பிரகாரம் விநியோகிக்கப்பட்ட எண்ணிக்கை 22,470 ஆகும். இதற்கமைய, கொள்வனவு செய்யப்பட்ட கன்றுகளிலும் கூடுதலாக 1,608 கன்றுகள்

விநியோகிக்கப்பட்டமையால் விநியேகப் பதிவேடு முறையற்றவாறு தயாரிக்கப்பட்டுள்ளன அவதானிக்கப்பட்டது.

III. ஒவ்வொரு நலன் பெறுநருக்குமான விநியோக அடடைப்படி விநியோகிக்கப்பட்ட கன்றுகளை விட 610 குறைவாகப் பெறப்பட்டதாக 2010 நவம்பர் 19 ஆந் திகதியன்று 3 நலன்பெறுநர்கள் தொடர்பாக நடாத்திய நேரடிப் பரிசோதனையில் புலனாகியது.

## 4.11 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

மாவட்டச் செயலகமும் 3 பிரதேச செயலாளர் அலுவலகங்களும் மேற்கொண்ட சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்றவாறிருந்தன. அவ்வாறு அவதானிக்கப்பட்ட சில சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

(அ) கொள்வனவு வழிகாட்டிக் கோவையில் குறிப்பிடப்பட்ட நடைமுறைகளுக்கு அப்பாற்பட்டவை

I. வழிகாட்டிக் கோவையின் 1.2.1 மற்றும் 3.2 என்பவற்றிற்கு முரணாக மாவட்டச் செயலகம் ரூபா 2 மில்லியனிலும் கூடுதலாக ரூபா 6,787,835 பெறுமதியான 2 வேலைகளை 4 பிரிவுகளாகப் பிரித்து 3 அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களுக்கு வழங்கியிருந்தது.

II. வழிகாட்டிக் கோவை 9.3.1 (ஆ) க்கமைய அமைச்சின் செயலாளரது அங்கீகாரத்தைப் பெறாது மாவட்டச் செயலகம் 2 வாகங்களைப் பழுதுபார்ப்பதற்கு ரூபா 470,197 எனவும் மொனராகல பிரதேச செயலாளர் அலுவலகம் ஒரு வாகனத்தைப் பழுதுபார்ப்பதற்கு ரூபா 252,915 எனவும் கொடுப்பனவுகளை மேற்கொண்டிருந்தன.

III. வழிகாட்டிக்கோவை 2.7.2 க்கமைய கொள்வனவு சபைக்கு திணைக்களத்திற்கு வெளியே உள்ள உத்தியோகத்தர் ஒருவரைத் தொடர்புபடுத்தாதும் 2.11.3 பிரிவின் பிரகாரம் விலையைப் பகுப்பாய்வு அறிக்கையைத் தயாரிக்காமலும் செவணகல பிரதேச செயலாளர் அலுவலகம் ரூபா 674,308 க்கும் படல்கும்புற பிரதேச செயலாளர்

அலுவலகம் ரூபா 2,912,550 க்கும் கொள்வனவுகளை மேற்கொண்டிருந்தன.

IV. வழிகாட்டிக் கொவையிலுள்ள ஏற்பாடுகளைக் கடைப்பிடிக்காது பிபில பிரதேச செயலாளர் அலுவலகம் 4 சந்தர்ப்பங்களில் ரூபா 818,55 க்குப் பொருட்களைக் கொள்வனவு செய்திருந்தன.

V. மெதகம பிரதேச செயலாளர் அலுவலகம் 2010 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று ரூபா 229,000 பெறுமதியான டுப்லோ இயந்திரம் ஒன்றைக் கொள்வனவு செய்கையில் வழிகாட்டிக் கோவை 2.11.3 க்கமைய தொழில்நுட்பப் பகுப்பாய்வு அறிக்கையைப் பெறவில்லை.

VI. வழிகாட்டிக் கோவை 5.4.4 (II) க்கமைய, அங்கீகரிக்கப்பட்ட சங்கம் ஒன்றிற்கு முற்பணமாக வழங்கப்படக் கூடிய தொகை ரூபா 200,000 ஆகும். புத்தள தலாகொல குளப்புனரமைப்புக்கு இத்தொகைக்கு அதிகமாக 2011 ஜனவரி 21 ஆந் திகதியன்று ரூபா 376,383 முற்பணமாக அங்கீகரிக்கப்பட்ட சங்கம் ஒன்றிற்கு மாவட்டச் செயலகத்தில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்
---------------------------------------------------------------

I. மாவட்டச் செயலகத்தின் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு வழங்கப்படும் எரிபொருள் படி மற்றும் பற்றுச்சீட்டுக்கள் மூலம் ஏற்படும் எரிபொருள் செலவினம் என்பன அக்காலத்தின்போது பயணஞ்செய்துள்ள கிலோமீட்டர் தூரத்துடன் ஒப்பிடுகையில் அசாதாரணமாக இருந்தன. 2010 ஜூன், ஜூலை, ஆகஸ்ட், செப்செம்பர், நவம்பர் ஆகிய 5 மாதங்களின்போது பயணஞ்செய்துள்ள தூரத்திற்கு ஈடான எரிபொருள் அளவிலும் பார்க்க கூடுதலாக ரூபா 80,570 எரிபொருளுக்காகச் செலுத்தப்பட்டிருந்தது. 2008 ஜூன் 26 ஆந் திகதிய 131/ 2008 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் படி உத்தியோகபூர்வ வாகனங்களுக்குரிய எரிபொருள் வரம்பிலும் கூடுதலாக 2010 ஆம் ஆண்டின்போது நுகரப்பட்ட ரூபா 387,275 பெறுமதியான 5276 லீட்டர் எரிபொருளுக்கான அமைச்சின் செயலாளரது அங்கீகாரம் பெறப்படவில்லை.

II. மாவட்டச் செயலகம் உத்தியோகத்தர் ஒருவருக்கு ஒதுக்கப்பட்ட வாகனத்திற்கு 2010 பெப்ரவரி, ஜூன், ஜூலை, செப்தெம்பர், நவம்பர் ஆகிய 5 மாதங்களின் போது பயணஞ்செய்த தூரத்திற்குத் தேவைப்படும் எரிபொருள் அளவிலும் கூடிய எரிபொருள் செலவினம் ரூபா 24,146 ஆகும். 2010 ஆம் ஆண்டின் போது அங்கீகரித்த வரம்பையும் மீறி நுகரப்பட்ட ரூபா 201,494 பெறுமதியான 2745 லீட்டர் எரிபொருளுக்கு அமைச்சின் செயலாளரது அங்கீகாரம் பெறப்படவில்லை.

III. உத்தியோகத்தர் ஒருவருக்கு ஒதுக்கப்பட்ட வாகனம் ஒன்றைப் பழுதுபார்ப்பதற்கு 2010 ஒக்டோபரில் அது கராஜ் ஒன்றிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. குறித்த உத்தியோகத்தருக்கு அம்மாதத்திலும் உத்தியோகபூர்வ வாகனத்திற்குரிய எரிபொருள்படியாக ரூபா 8,808 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

IV. முறையான அங்கீகாரமின்றி மாவட்டச் செயலகம் 2010 ஆகஸ்ட் 26 ஆந் திகதியன்று ரூபா 49,840 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட நடமாடும் தொலைபேசியின் பெறுமதி குறித்த உத்தியோகத்தரிடமிருந்து அறவிடப்படவில்லை.

## 4.12 நட்டங்களும் இழப்புக்களும்

### பிபில பிரதேச செயலக அலுவலகம்

(அ) பன்முகப்படுத்தப்பட்ட நிதியேற்பாட்டின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட 261 மண்வெட்டிகள் குறித்த நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்படாது வேறொரு நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டமையால் ரூபா 31,581 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) **கதிர்காமம் பிரதேச செயலாளர் அலுவலகம்**

2009 ஏப்ரல் மாதத்தில் காமாகிய ஓய்வுபெற்ற ஒருவரின் பொருட்டு 2009 நவெம்பர் வரை 7 மாதங்களுக்கு ரூபா 130,888 ஓய்வூதியமாக திகதியளவிலும் அவ்வாறு கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்ட ஓய்வூதியம் அறவிடப்படாதிருந்தது.

## 4.13 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

(அ) மாவட்டச் செயலகம் ஒவ்வொரு செலவின விடயத்தினதும் நோக்கத்தையும் தன்மையையும் கருத்திற்கொள்ளாது அச்செலவினத்தை தவறாக வேறொரு செலவின விடயத்தில் வரவு வைத்திருந்ததுடன் ரூபா 3,248 மூலதனச் செலவினத்தை மீண்டுவருஞ் செலவினத்திலும் ரூபா 84,270 மீண்டுவருஞ் செலவினத்தை 2 மூலதனச் செலவின விடயங்களிலும் வரவு வைத்திருந்தன.

(ஆ) பிபில பிரதேச செயலாளர் அலுவலகம் ரூபா 24,579 செலவினத்தைத் தவறாக மற்றும்மோர் செலவின விடயத்தில் வரவு வைத்திருந்ததுடன் ததனமல்வில பிரதேச செயலாளர் அலுவலகம் மூலதனத் தன்மை வாய்ந்த ரூபா 46,500 செலவினத்தை மீண்டுவருஞ் செலவின விடயத்தில் வரவு வைத்திருந்தது.

(இ) 2010 ஆம் ஆண்டில் நெல் கொள்வனவிற்கென மாவட்டச் செயலகத்திற்குத் திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்திலிருந்து ரூபா 10,000,000 கிடைக்கப்பெற்றது. இதில் ரூபா 4,000,000 மாத்திரம் செலவிடப்பட்டு 2010 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்திற்குத் திருப்பி அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

(ஈ) மொனராகல பிரதேச செயலாளர் அலுவலகம் 2010 டிசெம்பர் 31 அன்று வரைந்த ரூபா 597,608 பெறுமதியான 5 காசோலைகள் 2011 மார்ச் 01 ஆந் திகதியன்றும் பெறுநர்களிடம் ஒப்படைக்கப்படாதிருந்தது.

(உ) 2004 முதல் 2009 வரை மாவட்டச் செயலகமும் 7 பிரதேச செயலாளர் அலுவலகங்களும் கொள்வனவு செய்த 1162 அலகுகள் கொண்ட பண்டங்களை 2010 நவம்பர் 30 வரை விநியோகிக்கப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஊ) சீவனோபாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 7 பிரதேச செயலாளர் அலுவலகங்களால் வழங்கப்பட்ட தொகை முறையாக அறவிடப்படாது இருந்ததுடன் 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,713,930 கடன் நிலுவை அறவிடப்படாதுமிருந்தது.

(எ) இடர் முகாமைத்துவ அமைச்சின் நிதியேற்பாட்டின் கீழ் செவணகல விஜய சமுர்த்துக் குளத்தைப் புனரமைப்பதற்கு 2010 செப்தெம்பர் 13 மற்றும் நவெம்பர்

8 ஆகிய தினங்களில் ரூபா 4,000,000 பெறப்பட்டிருந்தது. ஆயினும், 2011 மார்ச் 09 அளவிலும் மதிப்பீடேனும் தயாரிக்கப்படாதிருந்தது.

(ஏ) தனமல்வில, மெதகம, பிபில, படல்கும்புற, கதிர்காமம், செவணகல ஆகிய பிரதேச செயலாளர் அலுவலகங்களுக்குரிய சமூர்த்தி வங்கிச் சங்கங்கள் பல்வேறு செயற்திட்டங்கலுக்கு வழங்கிய கடன்கள் முறையாக அறவிடப்படவில்லை 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 15,879,669 கடன் நிலுவையாக இருந்தது.

## 4.14 கணக்காய்விற்குக் கிடைக்கப் பெறாதசான்று

2010 ஆம் ஆண்டில் சமூர்த்தி சீவனோபாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிபில பிரதேச செயலாளர் அலுவலகம் கொள்வனவு செய்த ரூபா 3,019,500 பெறுமதியான சான்றுகள், விதைகள், பசளை, கோழிக் குஞ்சுகள் என்பன கையிருப்புப் புத்தகங்களில் சேர்த்துக் கொள்ளப்படாதிருந்தன. நலன் பெறுநர்களுக்கு அவை வழங்கப்பட்டதைக் குறிக்கும் பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 4.15 மனித வள முகாமைத்துவம்

### (அ) அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கையும் வெற்றிடங்களும்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை வருமாறு.

| ஊழியர் எண்ணிக்கை | அங்கீகரிக்கப்பட்ட உழியர் எண்ணிக்கை | உள்ளபடியான உழியர் எண்ணிக்கை | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|---|---|
| சிரேஷ்ட்ட மட்டம் | 39 | 37 | 02 |
| மூன்றாம் நிலை மட்டம் | 23 | 05 | 18 |
| இரண்டாம் நிலை மட்டம் | 637 | 534 | 103 |
| ஆரம்ப மட்டம் | 112 | 94 | 18 |
| அமைய/ பிரதியீடு | - | 08 | - |
| மொத்தம் | 811 | 678 | 141 |

## 4.16 உள்ளகக் கட்டுப்பாடு

### (அ) உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுக் கூற்றினால் மாவட்டச் செயலகத்தினதும் பிரதேச செயலாளர் அலுவலகங்களினதும் கொடுக்கல் வாங்கல்கள் போதியளவு உள்ளகக் கணக்காய்விற்கு உட்படுத்தப்படவில்லை.

### (ஆ) முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழுக்களை செயற்படுத்தல்

மீளாய்வாண்டின் போது முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுச் குழுக்கள் போதியளவு செயற்படவில்லை.